UNIT - 3

# நிலவுடமை முறைகளும் நில சீர்திருத்தங்களும்

## 1. நிலவுடைமைச் சிக்கல்

இந்திய வேளாண்மையில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருப்பது நிலவுடைமைச் சிக்கலாகும் அடிப்படையாக அமைகின்றது நமது நாட்டு மக்களுக்கு நிலத்தின் மீது இருக்கும் பற்று மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது நிலம்வருவாய் தருகின்றது என்றும் மதிப்புடைய சொத்து என்ற முறையில் வேளாண்மையில் நேரடியாக ஈடுபட அவர்களும் நிலத்தை வைத்துக் கொள்ள விரும்புகின்றனர்.

நிலவுடைமையாளர்கள் ஐ பொதுவாக மூன்று வகைகளாக பிரிக்கலாம் முதலாவதாக தங்களது நிலத்தை நேரடியாக சாகுபடி செய்யாமல் நிலத்தை குத்தகைக்கு கொடுத்து விடுபவர்கள் இரண்டாவது வகை நிலத்தை தாங்களே நேரடியாக மேற் பார்த்து விவசாயக் கூலிகளை கொண்டு சாகுபடி செய்பவர்கள் இவர்கள் நிலத்தில் இறங்கி ஈடுபடமாட்டார்கள் மூன்றாம் வகை நிலத்தில் தாங்களே உழைக்கும் நிலவுடைமையாளர்கள்

நில உடைமையை ஒட்டி நமது நாட்டில் இரு வகையான சிக்கல்கள் எழுந்தன ஒன்று நில வரி வசூலை பொட்டி அரசு ஏற்படுத்திய முறையால் ஏற்பட்ட சிக்கல் ஜமீன்தாரி முறை மகல்வாரி முறை ரயத்துவாரி முறை என்று மூன்று வகைகளில் அரசு வரி வசூல் முறை உருவானது இரண்டாவது சிக்கல் நிலவுடைமையாளர்கள் வேராகவும் நிலத்தில் உழைப்பவர்கள் வேறாகவும் இருப்பதால் எழுகின்ற சிக்கலாகும்.

நில வரி வசூலை ஒட்டிய சிக்கலை ஓரளவு அரசு தீர்த்து விட்டது ஆனால் நிலக்குத்தகை ஒட்டி எழுகின்ற சிக்கல் இப்பொழுதும் தீர்க்கப்படாத இருக்கின்றது நில உடைமைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கின்றது.

## II. ஜமீன்தாரி முறை

நிலவரி வசூலிக்க தோற்றுவிக்கப்பட்ட முறைகளில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது ஜமீன்தாரி முறையாகும்.கிழக்கிந்திய நிறுவனத்திடம் இந்தியாவின் ஆட்சி சென்றபோது எளிதாக நில வரி வசூலை பெறும் வழிமுறையாக ஜமீன்தாரி முறையை உருவாக்கினர் கவர்னர்

ஜெனரலாக இருந்த காரன் வாலிஸ் பிரபு நிலவரி வசூலித்துக் கொண்டிருந்த ஜமீன்தார்களோடு வரி வசூலிக்க நிலையான ஏற்பாட்டை செய்து கொண்டார் அதன்படி ஜமீன்தார்கள் அவர்களது பகுதிகளுக்கு நிலவுடைமையாளர்கள் ஏற்றுக்கொள்ள பெற்றனர் அவர்கள் தாங்கள் குத்தகையாக பெற்றதில் பதினொன்றில் 10 பங்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையின் அளவு நிர்ணயிக்கப்பட்டது

நன்மைகள்:. 1. அரசுக்கு கிடைக்கின்ற வருவாய் உறுதி செய்யப் பெற்றது 2. நிலவரி வசூலிக்கும் தொல்லையோ அதற்கு வேண்டிய அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பு செலவு அரசுக்கு இல்லை 3.ஜமீன்தார்களின் நிலவுடைமையாளர்கள் ஆக ஏற்றுக் கொள்வதால் அவர்கள் நிலத்தின் வளத்தை பெருக்கும் ஆக்கப் பணிகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது 4. ஜமீன்தார்களின் ஆதரவோடு ஆங்கிலேய ஆட்சியை வலுப்படுத்த வேளாண்மையில் ஈடுபட்டவர்களின் நியமிக்கப் பெற்ற தலைவர்களாக ஜமீன்தார்கள் விளங்குவார்கள் என்று கருதினர்.

ஆனால் நடைமுறையில் ஜமீன்தார்கள் விளைந்த நன்மைகளை விட கேடுகளை மிகுதி ஜமீன்தார்கள் நிலத்தின் வருவாயை பெறுவதில் காட்டிய ஆர்வத்தை நிலத்தை தெறிக்க செய்வதில் காட்டவில்லை ஜமீன்தார்கள் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொண்டனர் கிராம மக்களுக்கு தலைவர்களாக அவர்களால் விளக்க முடியவில்லை ஆங்கில அரசின் கால் வருடிகளாக அவர்கள் மாறினார்கள்

நாடு விடுதலை பெற்றவுடன் பல மாநிலங்களிலும் ஜமீன்தாரி முறையை ஒழிக்க சட்டங்களை இயற்றினார் ஏறத்தாழ ஜமீன்தார்களின் கையிலிருந்த 175 மில்லியன் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது இதற்காக அவர்களுக்கு கொடுத்த இழப்பீட்டு தொகை 500 கோடி ரூபாயாகும் ஜமீன்தாரி முறை ஒழிந்த பிறகு விவசாயிகள் நேரடியாக அரசுக்கு வரி செலுத்துகின்றனர்.

ஜமீன்தாரி முறையை ஒழித்தால் சில குறிப்பிடத்தக்க விளைவுகள் ஜமீன்தார்களின் முறைகெட்ட நிர்வாகத்திலிருந்து விவசாயிகளுக்குஜமீன்தார்களின் முறைகேட்டை நிர்வாகத்திலிருந்து விவசாயிகளுக்கு விடுதலை அரசு நேரடியாக வரி வசூலித்தால் நாடு முழுவதிலும் வரிஅரசு நேரடியாக வரி வசூலித்தால் நாடு முழுவதிலும் வரி வசூலில் ஓர் ஒருமைப்பாட்டை கொண்டுவர வரி வசூலில் நெகிழ்வுத்தன்மை ஏற்பட்டது தேவையான பொழுது அரசு சலுகை காட்டியது 4. நில

ஒருங்கிணைப்பு நில உச்சவரம்பு போன்ற சீர்திருத்தங்களை அரசினால் கொண்டுவர உழைக்காமல் உண்டு வாழ்ந்த ஜமீன்தார்கள் இனம் இல்லாமல்உழைக்காமல் உண்டு வாழ்ந்த ஜமீன்தார்கள் இனம் இல்லாமல் போனதால் சமநிலை சமுதாயத்தை உருவாக்கும் பணியை அரசு மேற்கொள்ள முடிந்தது.

III. மஹல்வாரி முறை

இந்த முறையில் கிராம சமுதாயத்தோடு அரசு ஒப்பந்தம் செய்து கொள்கின்றது அதன்படி நிலவரி செலுத்துகின்ற பொறுப்பு நிலக்கிழார்கள் தனிப்பட்ட பொறுப்பாகவும் கூட்டுப் பொறுப்பாகும் இருக்கின்றது இம்முறை முதலில் ஆக்ராவில் அதிலும் பின்பற்ற பெற்றது பின்னர் பஞ்சாபிலும் இதனை கைக்கொண்டனர் இம்முறையில் தரிசுநிலம் ஊருக்கு சொந்தமாக கருதப் பெறுகின்றது கிராம சமுதாயம் தரிசு நிலத்தை தனிப்பட்ட அவர்களுக்கு குத்தகைக்கு விடலாம் இந்த முறையின் கீழ் உள்ள நிலத்தில் கூட்டுறவு பண்ணையை அமைத்து சாகுபடி மேற் கொள்வது எளிதாக இருக்கும்.

IV. இரயத்வாரி முறை

இந்த முறையை 1872 இல் சென்னை மாநிலத்தில் சர் தாமஸ் மன்றோ கொண்டு வந்தார் பின்னர் இதனை பம்பாய் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் பின்பற்றினர் இம்முறையில் பதிவு செய்யப்பெற்ற நில உரிமையாளர் நிலக்கிழார் ஆவார் அவர் நேரடியாக அரசுக்கு வரி செலுத்துவதை நிலத்தை குத்தகைக்கு விடவோ ஒத்தி வைக்கவோ விற்கவோ நிலக்கிழார் உரிமை உண்டு நில வரி செலுத்துகின்ற வரை அவரை நிலத்தை விட்டு வெளியேற்ற முடியாது.

இந்த முறையில் நிலக்கிழார்கள் அரசோடு நேரடியாக தொடர்பு கொள்கிறார்கள். ஆதலால் நில வரியில் நெகிழ்வு தன்மைக்கு வழியுண்டு ஆனால் வரி விதிக்கின்ற முறை குறை உடையது என்று கூறப்படுகின்றது அரசின் அலுவலர்கள் நில வளம் நீர் வசதி நில மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு வரியை நிர்ணயிக்கின்றனர் இப்படி நிர்ணயிக்கின்ற வரி சிறிய விவசாயிகளை பெரிதும் பாதிக்கின்றது மேலும் நிலக்கிழார்கள் தங்களது நிலத்தை குத்தகைக்கு விடுகின்ற பொழுது மிகுதியாக குத்தகை பணம் பெறுகின்றனர்.

V. நிலச் சீர்திருத்தங்கள (Land reforms)

வேளாண்மை உற்பத்தியை பெருக்கவும் வேளாண்மையில் ஈடுபட்டு உள்ளவர்களின் தொடர்புகளை செம்மைப் படுத்தவும் நிலவுடைமை நெறிப்படுத்தவும் நிலச் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன நாடு விடுதலை பெற்றவுடன் ஜமீன்தாரி முறையை ஒழித்தது ஒரு பெரிய நிலச்சீர்திருத்தம் ஆகும்.ஆனால் அது நிலச் சீர்திருத்தத்தின் தொடக்கமாக அமைந்ததே தவிர வேளாண்மையில் உள்ள பல்வேறு சிக்கல்களையும் தீர்ப்பதாக இல்லை இப்பொழுது உள்ள நிலத்தை குத்தகைக்கு பெற்று சாகுபடி செய்பவர்களுக்கு பாதுகாப்பு தருவது நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் அளிப்பது பெற்ற நிலத்தை இணைப்பது கூட்டுப் பண்ணைகளை அமைப்பது ஆகியவற்றை ஒட்டி எழுகின்றன.

தற்போதைய நிலவுடைமை முறையின் குறைகள்:

1.அரசுக்கும் உண்மையான நில சாகுபடி அவர்களுக்கும் இடையில் எண்ணற்ற இடைத்தரகர்கள் இருக்கின்றனர்.

2.சாகுபடி நிலத்தில் பெரும்பகுதி குத்தகை முறையில் இருக்கின்றது.

3. எண்ணற்ற சிறு சாகுபடியாளர்களின் குத்தகை காலம் உறுதியாக இல்லை கடன் நில அடமானம் ஆகியவற்றினால் விவசாயிகள் தங்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் உரிமை தங்கள் கைகளில் இல்லாமல் அல்லல்படுகின்றனர்.

4. குத்தகை வாரம் அதிகமாக இருக்கிறது.

5. சிறிய துண்டாடப்பட்ட நில அமைப்புகளினால் சாகுபடியில் புதிய முறைகளை பின்பற்றவோ கருவிகளை கையாளவோ உரிய வாய்ப்புகள் குறைவாக உள்ளன.

6. நில பகிர்வில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன பெரும்பாலான விவசாயிகள் நிலமே இல்லாமலோ குறைவான நிலத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர் இதனால் இவர்களுக்கு உழைப்பதில் உற்சாகம் பிறக்க வில்லை.

7. விவசாயிகளுக்கு இன்று சரியான அமைப்பு முறை இல்லை.

நிலச் சீர்திருத்தங்களின் நோக்கங்கள்:

1.அரசுக்கும் புலவர்களுக்கும் இடையில் இருக்கின்ற இடைத்தரகர்கள் முறையை அகற்ற வேண்டும்.

2.உழைப்பவர்களுக்கு அவர்கள் கட்டுப்பாட்டிற்கு உள்ளிருக்கும் நிலவுடைமை உரிமையை வழங்க வேண்டும்.

3. நில உச்ச வரம்பை செயல்படுத்த வேண்டும்.

4. நில உரிமை ஆவணங்களை குத்தகைதாரர்கள் வாரதாரர்கள் பங்குதாரர்கள் ஆகியோரின் உரிமைகள் வெளிப்படும் வகையிலும் பாதுகாப்பு கிடைக்கும் வகையிலும் மாற்றியமைக்க வேண்டும்.

5.புதிய வேளாண்மை தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் வகையில் துண்டு துண்டாக இருக்கின்ற நிலங்களை இணைக்க வேண்டும்.

நிலச் சீர்திருத்தங்கள் இன் மூலம் இன்றைய நிலவுடைமை முறையில் இருக்கும் குறைகளை போக்கி அவர்களுக்கு நிலத்தை சொந்தமாக்கி வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்து தர விரும்புகின்றோம்.

1. நில குத்தகை சீர்திருத்தச் சட்டங்கள்:. குத்தகைக்கு நிலத்தை சாகுபடி செய்கின்ற முறை நீண்ட காலமாக இருக்கின்றது நிலம் சிலரின் உடமையாக இருக்கின்றது நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளனர் ஆதலால் போட்டிபோட்டுக்கொண்டு குத்தகைக்கு நிலத்தை பெறுகின்றனர் இதனால் குத்தகையை நிர்ணயிப்பதில் நிலக்கிழாரின் கை ஓங்குகிறது மேலும் பெரும்பாலான வேளைகளில் நில குத்தகை பதிவு செய்யப் பெறுவதில்லை நிலக்கிழார் இன் விருப்பம்போல் குத்தகை மாற்றம் பெறலாம் இதனால் குத்தகைக்கு நில வளத்தை பெருக்கவும் முழுமூச்சாக உற்பத்தியில் ஈடுபடவும் தூண்டுதல் கிடைப்பதில்லை இத்தகைய குறைகளை போக்க ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்திலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நாடு விடுதலை பெற்ற பிறகு தக்க வகையில் நிலக் குத்தகையைம்நெறிப்படுத்த காங்கிரஸ் அரசு முயன்றது குத்தகையாளர் களுக்கு பாதுகாப்பு கிடைக்கவும் நியாயமான வகையில் வாரத்தை நிர்ணயிக்கவும் பெரிய நிலத்தை சாகுபடியாளர்களுக்கு பிரித்துக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கின்றனர்.

விவசாயக் கூலி ஆட்களுக்கு குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன எடுத்துக்காட்டாக தமிழகத்தில் ராஜாஜி கொண்டுவந்த தஞ்சாவூர் பண்ணையாட்கள் சட்டத்தையும் காமராஜர் நிறைவேற்றிய நியாய குத்தகை சட்டத்தையும் குறிப்பிடலாம்.

ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் நிலை குத்தகையை மேலும் நெறிப்படுத்த முயன்றனர் நான்காம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் கீழ்க்கண்ட நில குத்தகை சீர்திருத்தங்களை கொண்டு வரப்போவதாக திட்டத்தின் அறிக்கை கூறியது.

1.குத்தகை நிலங்களை திரும்ப பெற முடியாமல் நிலையாக குத்தகை விட செய்வது.

2.விரும்பி குத்தகை யாளர்கள் நிலத்தை திருப்பி கொடுக்கின்ற பொழுது நிலவுடைமையாளர்கள் அவற்றை வேறு யாருக்காவது ஒதுக்க வேண்டும்.

3.பண்ணை களிலேயே வீடுகட்டி வாழும் குத்தகை அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும்.

4.துணை குத்தகை அவர்களுக்கும் குத்தகை பாதுகாப்பு சட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

5.தவறான முறையில் குத்தகையாளர் களை வெளியேற்றி சென்றவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் நிலச்சீர்திருத்த சட்டத்தை சிறப்பாக செயல்படுத்த தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை பதிவு சட்டம் இயற்றப்பட்டுள்ளது இச்சட்டம் இப்போது தஞ்சை திருச்சி மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது குத்தகைதாரர்கள் தங்கள் பெயர் மற்றும் விவரங்களை பதிவு செய்வதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் .

2. நில உச்சவரம்பு நிர்ணயித்தல்: சிலரின் கையில் மிகுதியாக நிலம் இருக்கின்றது நிலத்தில் உழைக்கின்ற பலர் நிலமற்ற விவசாயக் கூலிகளாக இருக்கின்றார்கள் இது ஒரு சமுதாய ரீதியாக கருதப்படுகின்றது ஒருவர் உச்சமாக எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்பதை வரையறை செய்வதன் அவசியத்தை பல பொருளில் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் நெடுங்காலமாகவே வலியுறுத்தி வந்துள்ளனர் .

முதலாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கையில் நில உச்சவரம்பு நிர்ணயித்து அதன் மூலமாக வேளாண்மையை சீர்படுத்த வேண்டும் என்பதை குறிப்பிட்டு இருந்தார்கள் ஆனால் முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் எந்த மாநிலமும் நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றவில்லை அத்தகைய சட்டம் கொண்டுவர அரசியல் நிர்ணய சட்டத்தில் சில தடைகள் இருக்கும் என்று கருதினர் அவற்றை நீக்க 1958ல்அரசியல் நிர்ணய சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது 1959இல்ஆளும் கட்சியான காங்கிரசின் நாக்பூர் தீர்மானம் தர்மத்தை நிலைநாட்டும் நோக்கத்தில் ஒவ்வொரு மாநிலமும் நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றி எச்சமாக உள்ள நிலத்தை நிலமற்ற மக்களுக்கு பஞ்சாயத்துக்களின் மூலமாக பகிர்ந்தளிக்க வேண்டும் என்று

கேட்டுக் கொண்டது இதனால் இரண்டாம் திட்டத்தின் இறுதிக்குள் 15 மாநிலங்கள் நில உச்சவரம்பு சட்டங்களை நிறைவேற்றினர்.

நில உச்சவரம்பு அளவு மாநிலங்களுக்கு இடையில் வேறுபட்டுள்ளது பஞ்சாப் ஹரியானாவில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ராஜஸ்தானில் 22 அசாமில் 50 ஏக்கர் மேற்கு வங்காளத்தில் 25 கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் 15 ஏக்கர்கள் மாநில அரசுகள் சூழ்நிலைக்கு ஏற்ப உச்சவரம்பை அமைகின்றன தமிழக அரசு உச்ச வரம்பை 10ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் ஆக்க எண்ணியது.

நிலவுடமைக்கு உச்சவரம்பு கட்டுவது இன்றியமையாத ஒன்று என்று கருதுகின்ற அவர்கள் கூறுகின்ற காரணங்களை தொகுத்துக் கூறலாம்.

1.சமுதாய நீதியை நிலை நாட்ட நில உச்சவரம்பு தேவை.

2.விவசாயிகளின் நில பசியை தீர்க்க வேண்டும் எல்லோரும் கொஞ்சமாவது நிலைமை வைத்துக் கொள்ள விரும்புகின்றனர்

3.வருவாய் ஏற்றத்தாழ்வை குறைக்க வேண்டுமென்றால் நில உச்சவரம்பு கொண்டு வரவேண்டும்.

4.உற்பத்தியைப் பெருக்க இது ஏற்ற வழியாகும் பெரிய அளவில் முதல் இல்லை ஆதலால் சரிவு முறை சாகுபடி மூலமாகத்தான் உற்பத்தியை பெருக்க முடியும் இதற்கு சிறிய பண்ணைகளேதேவை.

5.நிலத்தை பயன்படுத்துவதில் சரியான மாற்றங்களை செய்ய நில உச்சவரம்பு வழிவகுக்கும் உச்சவரம்பு சட்டம் துணைசெய்யும்.

நில உச்சவரம்பு சட்டத்தை எதிர்ப்பவர்கள் சில காரணங்களை கூறுகின்றனர்.:

1.நில உச்சவரம்பு சட்டம் பெரிய பண்ணைகள் அமைவதற்கு எதிராக செயல்படும்.

2.நமது நாட்டில் நில உச்சவரம்பு விட குறைந்த அளவு எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்ற அடிமட்ட வரம்பு மூலம் நிலம் துண்டாட படுவதைத் தடுப்பது தேவையாகும்.

3.நிலமற்ற விவசாயிகளின் நில பசியை தீர்க்கும் அளவுக்கு நிலம் எச்சமாக இல்லை.

4.எச்ச நிலத்தை எடுக்க அரசு கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை அரசுக்கு பாரமாக இருக்கும்.

5.நகர வருவாய்க்கு உச்சவரம்பு கட்டாமல் நிலவுடைமை க்கு மட்டும் உச்சவரம்பை நிர்ணயிப்பது அறமாகாது.

சிக்கல்கள்:. நில உச்சவரம்பு சட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன.

1.எதிர்காலத்தில் மிகுதியாக நிலம் வாங்குவதை தடை செய்வது எளிதாக இருக்கும் ஆனால் முன்பே நிலத்தை வைத்திருப்பவர்களிடம் இருந்து நிலத்தை பெறுவது சிக்கலான செயலாக இருக்கும்.

2. நில உச்சவரம்பு சட்டம் வருவதை அறிந்தவுடன் பெரிய நிலக்கிழார்கள் தங்களிடமுள்ள எச்ச நிலத்தை கை மாற்றி விடுகின்றனர்.

3.நில உச்சவரம்பு அளவை நிர்ணயிப்பதிலும் கருத்து வேறுபாடு எழுகின்றது.

4.எத்தகைய நிலங்களுக்கு நில உச்சவரம்பு சட்டத்தில் இருந்து விலக்கு அளிப்பது என்ற சிக்கல் தோன்றுகின்றது.

5. எச்சமாக இருந்து பெறுகின்ற நிலத்திற்கு எப்படி இழப்பீடு வழங்குவது என்பதையும் மற்றவர்களிடமிருந்து எப்படி நிலத்திற்குரிய கிரயத்தை பெறுவது என்பதையும் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

6.எச்ச நிலத்தை பகிர்ந்தளிப்பது மட்டும் வேளாண்மை உற்பத்தி கூடாது புதிதாக நிலம் பெறுகின்ற விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கு தேவையான பணம் கடனாக கிடைக்க அரசு ஆவணம் செய்ய வேண்டும்.

## சட்டங்களும் முன்னேற்றமும்

பல மாநிலங்களில் நில உச்சவரம்பு சட்டத்தை இயற்றி செயல்படுத்துகின்றனர் இதுவரை 20 லட்சம் ஏக்கர் நிலத்தை உச்சவரம்பு சட்டத்தின் மூலம் பெற்று மாநில அரசுகள் பகிர்ந்து அளித்துள்ளன மேற்கு வங்காளத்தில் 7.7 7 இலட்சம் ஏக்கரும் ஜம்மு-காஷ்மீரில் 45 இலட்சம் ஏக்கரும் பஞ்சாபில் 3.6 9 லட்சமும் உத்தரப்பிரதேசத்தில் 2.23 லட்சமும் மகாராஷ்டிரத்தில் 1.63 லட்சமும் மத்திய பிரதேசத்தில் 67 ஆயிரத்து 700 ஏக்கரும் குஜராத்தில் 39000 ஏக்கரும் அசாமில் 34000 ஏக்கரும் தமிழகத்தில் 20000 ஏக்கரும் உச்சவரம்பு சட்டத்தின் மூலம் பெறப்பட்டது.

நில உச்சவரம்பு சட்டத்தால் எதிர்பார்த்த பலன் விளையவில்லை இதற்கு அடிப்படையான காரணம் டேனியல் தார்னர் கூறுவதைப் போல நில உச்சவரம்பு சட்டங்களை இயற்றுவதும் செயல்படுத்துவதிலும் ஏற்பட்ட காலதாமதம் ஆகும். சட்டங்கள் வருவதைப் பற்றி மிகுதியாக பேசப்பட்டது பெரிய நிலக்கிழார்கள் எச்சரிக்கையாக தங்களிடமிருந்த மிகுதியான நிலத்தை பிரித்து உறவினர்களின் பெயரில்

எழுதி வைத்த வேறு முறைகள் மூலமும் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி விட்டனர் சட்டங்களை செயல்படுத்துவதில் அரசு திறமையோடும் தீவிரமாகவும் நடந்து கொண்டிருந்தால் மிகுந்த பலன் விளைந்திருக்கும்.

நிலச் சீர்திருத்தங்கள் மதிப்பீடு:

1963இல் ஜிஎல் நந்தாவின் தலைமையில் அமைந்த நிலச்சீர்திருத்த செயல்பாட்டு குழு 1964இல் அளித்த அறிக்கையில் நிலச் சீர்திருத்தங்களை கொண்டு வருவதில் இருக்கும் கீழ்க்கண்ட குறைகளை சுட்டிக் காட்டுகின்றது.

1.சட்டங்களை செயல்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் இருக்கின்ற நிர்வாக அமைப்பு முறை போதுமானதாக இல்லை.

2.குத்தகை பதிவேடுகள் பல மாநிலங்களில் இல்லை இருக்கின்ற மாநிலங்களிலும் அவை சரிவர இன்றுவரை எழுதப்பட்டிருக்கவில்லை.

3.குத்தகை பயிரிடுவோரின் பொருளாதார நிலை மோசமாகவே இருக்கின்றது.

4.பல மாநிலங்களில் நில குத்தகைதாரர் களுக்கு சட்டத்தின் மூலம் அளித்து இருக்கின்ற பாதுகாப்பு தற்காலிகமானதாகவே இருக்கின்றது.

5.பல இடங்களில் குத்தகைதாரர்கள் தாங்களே விரும்பி சாகுபடி செய்த நிலத்தை விட்டு செல்வதை போன்ற வெளி தோற்றத்தோடு கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்படுகின்றனர்.

6.நிலக்கிழார்கள் குத்தகை நிலத்தை திரும்ப பெறலாம் என்றிருக்கும் உரிமையைப் பயன்படுத்தி நிலக்கிழார்கள் குத்தகைதாரர்கள் வெளியேற்ற முடிகின்றது.

7. பல மாநிலங்களில் வாரத்தை இன்னும் பாதியாக குறைக்க வேண்டியுள்ளது.

8.குத்தகைதாரர் அவர்களின் உரிமைகளை காப்பாற்ற வேண்டுமானால் அரசு தலையிட்டு குத்தகை பணத்தை பெற்று நிலக்கிழார்கள் கொடுக்கும் முறை வரவேண்டும்.

9.நில உச்சவரம்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் பொறுமையான நிலை மாறுதல்களால் அவற்றை சரியாக செயல்படுத்த இயலவில்லை.

திட்டக்குழு நில சீர்திருத்தங்கள் செயல்பட்ட முறையை ஆராய்ந்து சில குறைகளை சுட்டிக் காட்டியுள்ளது.

1. உறுதியான விருப்பத்தோடுஅரசியல்வாதிகள் செயல்படவில்லை கூறுகின்ற கொள்கைகளுக்கும் செயல்பாட்டுக்கும்இடையில் பெரிய இடைவெளி இருக்கின்றது.2.கீழ்மட்டத்தில் இருந்து விவசாயிகள் நிலம் கேட்டு போராட்டம் நடத்திய வேறு வகையிலோ நெருக்கடியை ஏற்படுத்தும் நிலை இல்லை.3.அரசு வேளாண்மை நிதி வழிமுறைகள்எந்திரத்தின் மனப்பான்மையும் மெதுவாக செயல்படும் போக்கும் மாற்றங்களுக்கு தடையாக இருக்கின்றன.4நீதிமன்றங்களின் உதவியோடு பல சீர்திருத்த சட்டங்கள் செயல்படுவதை ஒத்திப்போட செய்துவிடுகின்றனர் 5. சரியான பதிவேடுகள் ஆவணங்கள் இல்லை.6. நில சீர்திருத்த சட்டங்களை செயல்படுத்த வேண்டிய நிதி ஒதுக்கப்படவில்லை.

நிறைவுரை: முழுப் அவர்களுக்கு நிலம் சொந்தம் என்பது நடைமுறைக்கு வராமல் நிலவுடைமை முறையில் இருக்கும் குறைகளை போக்க முடியாது நிலவுடைமை முறை சிக்கலை தீர்க்காமல் வேளாண்மையில் புரட்சியை ஏற்படுத்த முடியாது இப்பொழுது காகிதத்தில் இருக்கின்ற சட்டங்களை உண்மையாக உறுதியாக நம்பிக்கையோடு செயல்படுத்தினால் நமது நாட்டில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படும் என்று கூறலாம்.

Unit-4

## வேளாண்மை பொருட்களின் அங்காடி நடவடிக்கை

வேளாண்மைப் பொருட்களை 1. நுகர்வோர் பொருட்கள் 2. தொழில் மூலப்பொருட்கள் என்று இரு வகைகளாகப் பிரிக்கலாம் பால் முட்டை பழம் காய்கறிகள் போன்றவை நுகர்பொருட்கள் ஆகும் இவற்றை அப்படியே நேரடியாக நுகர்வோர் பயன்படுத்துவார்கள். கரும்பு பருத்தி புகையிலை கோதுமை போன்ற பொருட்களை தொழில் மூலப்பொருட்கள் என்கின்றனர். இவற்றை தொழிற்சாலைகள் பயன்படுத்தி நுகர் பொருட்களை உருவாக்கி வழங்குகின்றன. சில பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் ஆகும் தொழில் மூலப்பொருட்கள் ஆகும் இருக்கின்றன எடுத்துக்காட்டாக முட்டையும் கோதுமையையும் கூறலாம் இவற்றை நுகர்வோர் நேரடியாக பயன்படுத்துகின்ற பொழுது நுகர்வோர் பொருட்களாக உள்ளன. இவற்றையே ரொட்டி செய்யும் தொழில் கூடத்தில் ரொட்டி செய்ய பயன்படுத்துகின்ற பொழுது இவை தொழில் பொருட்கள் ஆகின்றன.

I.வேளாண்மை பொருட்களின் இயல்புகள்:

வேளாண்மை பொருட்களின் அங்காடி நடவடிக்கை அவற்றின் இயல்புகளை ஒட்டி சிக்கல் நிறைந்ததாக இருக்கின்றது ஆதலால் வேளாண்மை பொருட்களின் அங்காடி நடவடிக்கையை முழுமையாக புரிந்துகொள்ளவும் வேண்டிய மாற்றங்களை செய்யவும் அவற்றின் இயல்புகளை அறிந்து கொள்வது தேவையாகின்றது.

1. சிறிய அளவில் உற்பத்தி:வேளாண்மை என்றும் முழு நிலையில் தொழிலாக மாறவில்லை அது வாழ்க்கை முறையாகவே இருக்கின்றது பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவில் வேளாண்மை செய்கின்றனர் பெரும் பண்ணைகள் மிகுதியாக இல்லை.

2. இயற்கையை சார்ந்த உற்பத்தி:வேளாண்மையில் அறிவியல் முறைகளைப் புகுத்தி போதிலும் இன்றும் பெருமளவு வேளாண்மை இயற்கையின் சக்திகளை சார்ந்து இருக்கின்றது உரிய காலத்தில் பருவமழை பெய்து தட்பவெப்ப நிலை சாதகமாக இருந்தால் நல்ல விளைச்சல் இருக்கும்.

3. பரவலான சிறப்பு உற்பத்தி:வேளாண்மை உற்பத்தி பரவலாக நாடு முழுவதும் நடைபெறுகின்றது ஒவ்வொரு இடத்திலும் இருக்கும் மண்ணின் வளம் தட்ப வெப்ப நிலை ஆகியவற்றை ஒட்டியே பொருட்களையே விளைய வைக்க முடிகின்றது.

4. பருவகால உற்பத்தி:எல்லா வேளாண்மை பொருட்களையும் எல்லா காலங்களிலும் உற்பத்தி செய்ய இயலுவதில்லை சில குறிப்பிட்ட பருவ காலங்களில் தான் சிலவற்றை உற்பத்தி செய்ய முடிகின்றது இதனால் ஒரே நேரத்தில் வேளாண்மை பொருட்கள் விற்பனைக்கு அங்காடியில் குவிவதைக் காணலாம்.

5. அளவையும் தரத்தையும் கட்டுப்படுத்த இயலாமை:வேளாண்மை பொருட்களின் மொத்த உற்பத்தி அளவையும் தரத்தையும் கட்டுப்படுத்த இயலாது இதனால் இவற்றின் அழிப்பில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன இவை விலையை பாதிக்கின்றன.

6. கனமானவை:வேளாண்மை பொருட்கள் கனமானவை ஆகவும் அளவில் அதிகமாகவும் இருக்கின்றன ஆதலால் இவற்றை உற்பத்தி இடங்களிலிருந்து விற்பனை இடங்களுக்கு கொண்டு செல்ல மிகுந்த போக்குவரத்து வசதி வேண்டியதிருக்கிறது போக்குவரத்து செலவும்

ஆகின்றது இருப்பு வைக்க போதுமான கிடங்குகளும் வேண்டியது இருக்கின்றன

7. நெகிழ்வற்ற தேவை:பெரும்பாலான வேளாண்மை விளை பொருட்களுக்கு உரிய தேவை நிகழ்வதாக இருக்கின்றது தேவை ஒரே அளவில் இருப்பதால் இவற்றின் அழிப்பிற்கு ஏற்ப விலையில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன.

8. அழிவு தன்மை:பல வேளாண்மைப் பொருட்கள் எளிதில் அறியக் கூடியவை களாக இருக்கின்றன ஆதலால் அவற்றை கட்டிக் காப்பதும் நல்ல விலைக்கு விற்பனை செய்வதும் அரிய பணிகள் ஆகின்றன.

II. மொத்த விநியோக முறை

வேளாண்மை பொருட்களின் மொத்த விநியோகம் வரை கீழ்க்கண்ட வழிகளில் நடைபெறுகின்றன.

1.உள்ளூர் அங்காடிகள்:

வேளாண்மைப் பொருட்களை ஆங்காங்கு அமைந்திருக்கும் உள்ளூர் அங்காடிகளுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர் பொதுவாக அந்தந்த வட்டார பொருட்களைக்கொண்டு வந்து விற்க இந்த அங்காடிகள் துணை செய்கின்றன. நாளங்காடி யாகவோ, வார அங்காடி யாகவோ திருவிழாக்களை ஒட்டி அமையும் சிறப்பு அங்காடி உள்ளூர் அங்காடிகள் அமைந்திருக்கின்றன

நன்மைகள்:. 1.உற்பத்தியாளர்களுக்கு மிக அருகிலேயே பொருட்களை கொண்டு சென்று விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது.

2. உடனடியாக விற்பனை செய்து பணத்தை பெற ஏற்ற இடமாக உள்ளூர் அங்காடி உள்ளது.

3. மொத்தமாக ஒரு இடத்தில் பொருட்கள் விற்பனைக்கு குவிவதால் வாங்குபவர்கள் வேண்டிய அளவில் வாங்கி சிக்கனமாக கொண்டு செல்ல முடிகின்றது.

4.உள்ளூர் அங்காடிகளில் பொருட்களை இருப்பு வைக்க நிறுத்த தரம் பிரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

இடைநிலையாளர்கள்:

உள்ளூர் அங்காடியில் பொருட்களின் விற்பனைக்கு துணை செய்யும் வகையில் நான்கு வகையான இடைநிலையாளர்கள் உள்ளனர்.

1. உள்ளூர் வாங்குபவர்கள் உள்ளனர் இவர்கள் பொருட்களை வாங்கி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வார்கள்.

2. சுற்றுப்பயண வாங்குபவர்கள் உள்ளனர். இவர்கள் பண்ணைகளுக்கும் அங்காடி களுக்கும் சென்று வேளாண்மைப் பொருட்களை வாங்கி வேறு அங்காடிகளுக்கு கொண்டு சென்று விற்கின்றனர்.

3. கூட்டுறவு சங்கங்கள் தங்களது உறுப்பினர்களின் விலை பொருட்களை வாங்கியும் மொத்தமாக திரட்டி விற்பனைக்கு துணை செய்கின்றன.

4.ஏல நிறுவனங்கள் பழங்கள் காய்கறிகள் போன்றவற்றை ஓரிடத்தில் சேர்த்து ஏலம் மூலம் விற்பனை செய்ய துணை செய்கின்றன.

2. மைய அங்காடிகள் (Central markets)

உள்ளூர் அங்காடிகளில் கிடைக்கின்ற பொருட்களை வாங்கி பெரும் நகரங்களில் அமைந்துள்ள மையம் மொத்த விற்பனை அங்காடிகளுக்கு கொண்டு வருகின்றனர் இவை சிறந்த போக்குவரத்து கிடங்கு வசதிகளை கொண்டிருப்பதால் பெருமளவில் வேளாண்மைப் பொருட்களை வாங்க விற்க முடிகின்றன இவைதான் வேளாண்மை பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் மையங்களாக விளங்குகின்றன.

மைய அங்காடிகளின் வளர்ச்சி;

*சில இடங்களில் மைய அங்காடிகள் சிறப்பாக வளர்வதற்கான காரணங்களை தொகுத்துக் கூறலாம்.

*மிகுந்த போக்குவரத்து வசதிகளை கொண்டிருக்கும்.

*உற்பத்தி செய்யும் வட்டாரங்களின் மையமாக விளங்கும்.

*மேலாண்மை பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்தும் ஆலைகள் வளர்ந்திருக்கும்.

*ஏற்றுமதி நிலையங்களாக இருக்கலாம்.

*பொருட்களை இருப்பு வைக்க கிடங்கு வசதிகளையும் பொதிய, தரம் பிரிக்க,வாய்ப்புகளையும் கொண்டிருக்கும்.

*வங்கிகள் நிதி நிறுவனங்கள் வளர்ச்சி பெற்றிருக்கும் வேண்டிய கடன் வசதிகள் கிடைக்க வாய்ப்பு இருக்கும்.

*செய்திப் போக்குவரத்து வாய்ப்புகள் இருக்க வேண்டும் . அங்காடி விவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டும்.

பணிகள்

மைய அங்காடி சில குறிப்பிட்ட பணிகளை செவ்வனே செய்கின்றன.

1.உள்ளூர் அங்காடிகளில் இருந்து பொருட்களை வாங்கி ஓரிடத்தில் குவிக்க வழிவகுக்கின்றது.

2. இரண்டாம் நிலை அங்காடிகளுக்கு தட்டுத் தடங்கலின்றி பொருட்கள் செல்ல விநியோக வழிமுறையை அமைத்துத் தருகின்றது.

3. வேளாண்மைப் பொருட்களை தரம் பிரிக்க கட்டிக்காக்க பக்குவப்படுத்த வாய்ப்பு வசதிகளை வழங்குகின்றது.

4. அங்காடிக்கு வரும் பொருட்களை உடனடியாக விற்பனை செய்யும் சூழ்நிலையை உருவாக்கி வேளாண்மை பொருட்களின் அங்காடி நடவடிக்கைகளில் உள்ள இடர்பாட்டை குறைகின்றது.

5.மிகப்பெரிய ஆலைகள் தொழிற்சாலைகள் வாணிப நிறுவனங்கள் நேரடியாக வாங்குவதால் நல்ல விலைக்கு விற்க முடிந்தது.

6.சில பொருட்களை எதிர்காலத்தில் தருவதாகக் கூறி இப்பொழுதே விற்பனை செய்ய இயலுகிறது.

7. கிடங்குகள் இருப்பதால் நல்ல விலை வரும் வரை காத்திருந்து விற்கலாம்.

8. வேண்டிய நிதி கிடைக்கும்.

இடைநிலையாளர்கள்:

மைய அங்காடியின் தேவையை ஒட்டி பல வகையான இடைநிலையாளர்கள் பணி செய்கின்றனர். முதலாவதாக மொத்தமாக வாங்குபவர்கள் பெருமளவில் அங்காடிக்கு வரும் பொருட்களை வாங்கி பின்பு விற்பனை செய்கின்றனர். இரண்டாவதாக தரகர்கள் பதிலாட்கள், போன்றவர்கள் பொருட்களை வாங்க விற்க துணை செய்கின்றனர்.மூன்றாவதாக மாற்று மையங்களை ஏற்படுத்தி பொருட்களை வாங்கி விற்க வழி வகுப்பவர்கள் உள்ளனர்.நான்காவதாக கிட்டங்கி களை அமைத்து பொருட்களை இருப்பு வைக்க துணை செய்பவர்கள் இருக்கின்றனர் ஐந்தாவதாக சில பெரிய நிறுவனங்களுக்காக பொருட்களை வாங்கும் பதிலாள்கள் உள்ளனர்.

3. வேளாண்மை நுகர்பொருட்கள் அங்காடி:

நேரடியாக நுகர்வோர் வாங்க கூடிய காய்கறிகள் கனிகள் முட்டைகள் போன்றவற்றிற்கு தனி அங்காடிகள் அமைகின்றன. இவற்றை பணிசெய் அங்காடிகள் என்று கூறலாம்.

4. இரண்டாம் நிலை அங்காடிகள்:

மைய அங்காடிகளில் இருந்து வேளாண்மை மூலம் பொருட்களை பெற்று தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை செய்கின்றன வினியோகம் முறை சிறப்பாக செயல்பட இவை துணை செய்கின்றன.

III. வேளாண்மை நுகர் பொருட்களின் விநியோகம் முறை:

வேளாண்மை நுகர் பொருட்களின் விநியோகம் முறை வேளாண்மை மூலப்பொருட்களின் வினியோகம் முறையிலிருந்து மாறுபடுகின்றது பொருட்களின் இயல்பையும் பொருட்களின் உற்பத்தி இடத்திற்கும் புகழும் இடத்திற்கும் உள்ள தூரத்தை சார்ந்தும் விநியோக முறை வேறுபடுகின்றது.

1. மொத்த விற்பனையாளர்கள் மூலம்:இது ஒரு சுற்றி வளைத்து விநியோகம் செய்யும் முறையாகும் விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விற்பனை செய்வார்கள் உள்ளூரில் இருந்து பொருட்களை அடித்து செல்லும் சில்லரை விற்பனையாளர்கள் மையங்களில் இருந்து பொருட்களை பெற்று நுகர்வோருக்கு விற்பனை செய்வார்கள்.

2. சில்லறை விற்பனையாளர்கள்:விவசாயிகள் முட்டை காய்கறிகள் பழங்கள் போன்ற பொருட்களை நேரடியாக சில்லறை வணிகர்களுக்கு விற்பனை செய்வார்கள் அவர்கள் நுகர்வோர்களுக்கு இந்த முறையில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

3. நேரடியாக நுகர்வோருக்கு விற்றல்: குறைந்த அளவில் வேளாண்மை பொருட்களை உற்பத்தி செய்கின்ற சிலர் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்வதை காணலாம் இத்தகைய நேரடி விற்பனை நான்கு வகைகளில் அமைகிறது முதலாவதாக வீடு வீடாக கொண்டு சென்று விற்பனை செய்யலாம் இரண்டாவதாக சாலையோரங்களில் வைத்து விற்பனை செய்யலாம் மூன்றாவதாக தினசரி வாரச் சந்தைகளில் கொண்டுசென்று விற்கலாம் நான்காவதாக அஞ்சல் மூலமும் பொருட்களை விற்கலாம்.

IV. வேளாண்மை பொருள் அங்காடியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்:.

வேளாண்மைப் பொருட்களை விற்பனை செய்வதில் மரபு வழியில் அமைந்திருந்த முறைகள் பெரும் மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றன அவற்றில் குறிப்பிடத்தக்க ரெண்டை சுட்டிக்காட்டலாம்.

1. பரவல் முறை அங்காடி:. குறிப்பிட்ட சில மைய அங்காடிகள் சிறப்புப் பெற்றிருந்த நிலை மாறி பல சிறிய அங்காடிகள் நாடெங்கும் தோன்றி வளர்ந்து வருகின்றன சாலைகளில் பெருக்கமும் லாரிகளின் வளர்ச்சியும் செய்திப் போக்குவரத்து வசதிகளும் இடங்களும் கூட்டுறவு முறையில் எழுச்சியும் அரசின் அங்காடியை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளும் சில்லரை வாணிபத்தில் பேரங்காடி தோன்றியிருப்பதும்பரவல் முறை அங்காடி நடவடிக்கையை ஊக்குவிக்கின்றன.

2. ஒப்பந்த பண்ணை முறை: மேலை நாடுகளில் ஒப்பந்த பண்ணை முறை வளர்ந்து வருகிறது இதன்படி பெரிய விவசாயிகள் நேரடியாக தொழில் நிறுவனங்களுக்கு எந்த பொருளை என்ன விலையில் எந்த அளவில் விற்பனை செய்வது என்று முன்கூட்டியே ஒப்பந்தம் செய்து கொண்டு வேளாண்மை செய்கின்றனர் இதனால் அங்காடி நடவடிக்கையில் இதை நிலை அவர்களின் முக்கியத்துவம் குறைகின்றது.

## 2. இந்தியாவில் வேளாண்மை பொருட்களின் அங்காடி நடவடிக்கை

நமது நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டு இருப்பதாலும் மொத்த தேசிய வருவாயில் ஏறத்தாழ பாதி வேளாண்மையிலிருந்து வருவதாலும் வேளாண்மை பொருட்களின் விற்பனை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது இந்திய வேளாண்மை பெற்றுள்ள நாடுகளின் வேளாண்மையில் இருந்து பல வழிகளில் மாறுபடுவதால் இதனை தனியாக பயில வேண்டிய தேவை இருக்கின்றது.

### I. குறிப்பிடத்தக்க குறைகள்

இந்திய வேளாண்மை பொருட்கள் அங்காடி இன்றும் சரியான முறையில் அமையவில்லை ஆதலால் அதில் பல துறைகள் காணப்படுகின்றன அவற்றில் குறிப்பிடத்தக்க வற்றை சுட்டிக்காட்டலாம்.

1. உள்ளூரிலேயே விற்க வேண்டிய நிலை.
2. அமைப்பற்ற நிலை

3. எண்ணற்ற இடைநிலையாளர்கள்.
4. அங்காடியின் தவறான போக்குகள்.
5. பல்வகை படிகளும் அளவுகளும்.
6. பல கட்டணங்கள்
7. கடன் வாய்ப்பின்மை
8. போதுமான போக்குவரத்து வசதி இன்மை.
9. போதுமான கிடங்குகள் இன்மை.
10. அங்காடி விவரங்கள் கிடைக்காமை
11. தரம் பிரிக்காமை
12. கலப்படம்

II.வேண்டிய சீர்திருத்தங்கள்:

இந்தியாவில் வேளாண்மை பொருள் விற்பனையில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன மேலும் செய்ய வேண்டிய முக்கிய சீர்திருத்தங்களும் முன்னேற்றங்களும் உள்ளன அவற்றை சுட்டிக்காட்டலாம்.

1. நெறிப்படுத்தப்பட்ட அங்காடி
2. சரியான படிகளும் அளவுகளும்
3. கிடங்கு வசதிகள், போக்குவரத்து வசதிகள்
4. அங்காடி செய்திகள்
5. கூட்டுறவு முறை
6. நியாயவிலை

III.கூட்டுறவு அங்காடி முறை வளர்ச்சி

1954 ஆம் ஆண்டில் அகில இந்திய கிராம கடன் விசாரணைக்குழு கூட்டுறவு முறையில் வேளாண்மைப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய அவசியத்தை மிகவும் வலியுறுத்தியது அந்த குழு கீழ்க்கண்ட முக்கிய பரிந்துரைகளை கூறியது.

1.முக்கியமான இடங்களில் எல்லாம் அடிப்படை அங்காடி சங்கங்களை அமைக்க வேண்டும்.

2. அடிப்படை அங்காடி சங்கங்களை தக்க முறையில் இணைக்க வேண்டும்.

3. அரசு கூட்டுறவு அங்காடி சங்கங்களுக்கு கீழ்க்கண்ட முறைகளில் உதவ வேண்டும்.

4.கூட்டுறவு அங்காடி சங்கங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

5.கிடங்குகள் கட்ட நிதியுதவி அளித்தல்.

6.நிர்வாக அலுவலர்களை நியமிக்க உதவித்தொகை கொடுத்தல்.

ஒவ்வொரு மாநில அரசும் கூட்டுறவு அங்காடிகளை அமைப்பதில் கவனம் செலுத்துகின்றது. 1970 71 நமது நாட்டில் 3199 அடிப்படை கூட்டுறவு சங்கங்களும் 161 மாவட்ட நிலை மத்திய சங்கங்களும் 27 மாநில சங்கங்களும் செயல்பட்டன.

இப்பொழுது நமது நாட்டில் கூட்டுறவு சங்கங்கள் வேளாண்மை பொருட்களின் அங்காடி நடவடிக்கையில் வாங்குதல் விற்றல் பதப்படுத்துதல் கடன் கொடுத்தல் உறுப்பினர்களுக்கு பங்கிடுதல் கிடங்கு வசதி அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றன.

### 3. வேளாண்மை விலைக் கொள்கை
(Agricultural price policy)

வேளாண்மை பொருட்களின் விலையை நிர்ணயித்தல் ஒழுங்குபடுத்துதல் கட்டுப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை வேளாண்மை விலைக் கொள்கை என்கிறோம்.

நோக்கங்கள்:

1. வேளாண்மை விலையை நிர்ணயித்தல் ஒழுங்குபடுத்துதல் கட்டுப்படுத்துதல்.

2. விலை ஏற்றத்தாழ்வை தவிர்த்தல்.

3. நியாயமான விலை உழவர்களுக்கு கிடைக்கச்செய்தல்.

4. தரமான பொருள் நியாய விலையில் கிடைக்கச் செய்தல்.

5. வெவ்வேறு மாநிலங்களின்விலைகளை ஒருங்கிணைத்தல்.

6. உணவு தானியம் மற்றும் உணவு தானியம் அல்லாத பொருட்கள் இடையே நல்ல தொடர்பை நிலைப்படுத்துதல்.

விவசாயமும் விலை கொள்கையும்:

வேளாண்மை உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்தாலும் விவசாயி தன்னிறைவு அடையவில்லை.தரமற்ற நிலம் வறண்ட ஆறு பருவ நிலை மாற்றம் தொழில்நுட்பம் குறைவு ஏற்றம் பெறாத விளைச்சல் கிட்டாத விலைகளை வீண்டிக்கப்படும் உணவுப்பொருட்கள் இவற்றுக்கிடையில் விவசாயி வளம் காண்பது இல்லை.

உற்பத்தி இடர்பாடு விலை உறுதியற்ற தன்மை விவசாயிகள் இருப்பதற்கு காரணம்.

சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்தி ஒரு இடத்தில் நடக்கிறது ஆனால் விற்பனை உலகம் முழுவதும் நடக்கின்றது உரிய விலை கிடைத்தால் மட்டுமே உற்பத்தி உறுதி செய்யப்படும் உற்பத்திபாதி கிணறு சரியான விலை பாதிக் கிணறு விவசாயி வாழ்வு பயிரிடும்போது பருவமழை சூதாட்டமும் விற்பனை போது இடைத்தரகர்கள் சூதாட்டமும் ஏற்படுகிறது இதனால் விவசாயம் கைக்கும் வாய்க்கும் மட்டுமே.

எனவே வேளாண்மை விலை நிர்ணய ஆணையம்(agriculture price commission) 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.பின் அது வேளாண் பொருளின் விலை நிர்ணய ஆணையம் ஆக மாற்றப்பட்டு (commission for agricultural cost and prices-1985)அதன் பேரில் மத்திய அரசு விலை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை பருவநிலைக்கு முன் ஆரம்பித்தது (minimum support price) பயிர் உற்பத்தி தேவையை குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயித்தது.

1960இல் கோதுமை நெல் உயர் விளைச்சல் தரும் ரகம் பயிரிட தொடங்கப்பட்டது. நெல் கோதுமை பருத்தி கரும்பு தவிர மற்ற பயிர்களுக்கு குறைந்தபட்ச விலை விலையை விட அதிக விலை அனைத்து பயிருக்கும் கிடையாது.

குறைந்தபட்ச ஆதரவு விலை 16 சதவீத விவசாயிகளுக்கு மட்டுமே தெரியும். இந்த விலைக் கொள்கை காய்கறிகளுக்கு கிடையாது 24 பொருள் குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மாதிரி மதிப்பாய்வு (national sample survey organization 2014) அறிக்கையின்படி கிராமத்திலுள்ள 15.6 1 கோடி குடும்பங்களில் 9.2 கோடி குடும்பங்கள் வேளாண்மையை சார்ந்துள்ளன. 42.2 சதவீத குடும்பங்கள் விளைநிலங்கள் இல்லாமல் உள்ளன ஆனால் எந்தவித பயனும் இல்லை மேலும் இதில் 87 சதவீத வேளாண் குடும்பத்தினர் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆவார்கள். இவர்களும் விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு உற்பத்தி செய்வதில்லை அதனால் கொள்கையினால் இவர்களுக்கும் யாதொரு பயனும் இல்லை.

எனவே குறைந்தபட்ச விலையை ஒரு சில பயிர்களுக்கு உயர்த்துவதன் மூலம் வேளாண் நெருக்கடியை சமாளிக்க முடியாது என்று விவசாயிகளின் தற்கொலைக்கு முக்கிய காரணங்களாக இருப்பது பொய்த்துப் போகும் நீர்வளம், மீளமுடியாத கடன் சுமை, மற்றும் கிராமப்புறங்களில் போதிய மாற்று வேலையின்மை ஆகியவையே.

டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் தேசிய வேளாண் குழுவின் அறிக்கையின்படி நிலச்சீர்திருத்தம் நீர்ப்பாசன வசதி புதிய தொழில்நுட்பங்கள் விற்பனைக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதி போதிய ஆராய்ச்சி கல்வி கிராமப்புற வேலைவாய்ப்புகள் இல்லாமை நிதி நிறுவனங்களில் இருந்து போதிய நிதி வசதி செய்து தராமல் இவையெல்லாம் விவசாயிகளுக்கு வேதனை தருவதாக உள்ளன.

எனவே அரசின் விலைக் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது விவசாயிகளை காப்பாற்ற மத்திய மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன இருப்பினும் அதன் வெற்றி கேள்விக்குறியாகவே உள்ளது இந்த கொள்கையின் அடிப்படையில் மத்திய பிரதேச அரசு வேளாண் விளைபொருட்களுக்கு விலை பற்றாக்குறை பணம் வழங்கல் (price deficiency payment)முறையை 2017 18 8 பயிர்களுக்கு அறிவித்தது அதாவது குறைந்தபட்ச ஆதரவு விலை சந்தை விலையை விட குறைவாக இருக்கும் போது அதற்கான விலை பற்றாக்குறையை அரசு வழங்குவதாக அறிவித்தது இந்த முறை இடைத்தரகர்கள் விவசாயிகளிடமிருந்து விலை பொருட்களை முன்கூட்டியே வாங்குவதற்கு வசதியாக அமைந்தது.

பற்றாக்குறை நிதியை இவர்களே பெற்றார்கள் இதில் விவசாயிகளை விட இடைத்தரகர்களும் பதுக்கல்காரர்களுமேஅதிகம் பயன் அடைந்ததாக தெரிகின்றது எனவே இம்முறை கைவிடப்படுகிறது.எனவே குறைந்தபட்ச ஆதரவு விலை கொள்கையை குறைந்தபட்ச வருமான

கொள்கையாக மாற்றினால் விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும் இந்த மாற்றுக் கொள்கை முறையில் விவசாயிகளை அரசு சென்றடைய வேண்டும்.

அதாவது நேரடியாக விவசாயிகளுக்கு நிலப்பரப்பின் அடிப்படையில் நிதி உதவி வழங்கலாம் நிலப்பரப்பின் அடிப்படையில் நேரடி நிதியுதவி வழங்கும் முறையானது ஐரோப்பிய கூட்டமைப்பில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சீனாவிலும் நடைமுறையில் உள்ளது மேலும் இது உலக வர்த்தக நிறுவனத்தின் கொள்கைக்கு உட்பட்டே அமைந்துள்ளது.

தற்போது மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நாடு முழுவதும் பயனாளிகளுக்கு நேரடியாக நிதி உதவி வழங்கி வருகின்றது இதேபோல் நேரடி நிதி உதவியை நிலப்பரப்பின் அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆதார் அட்டை மூலமாக வழங்கலாம்.

நிதி உதவியை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தலாம் மேலும் விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு உச்சவரம்பு நிர்ணயித்து நிதி உதவி செய்யலாம் இது எளிதாகவும் தெளிவாகவும் இருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் சமமான நிதி உதவி கிடைக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை யில் உள்ள பயிர்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகள் மறையும்.

இப்போது நிலப்பரப்பின் அடிப்படையில் தெலுங்கானா மாநிலம் விவசாயிகளின் முதலீடு ஆதரவு திட்டத்தின் மூலம் அவர்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது கர்நாடக மாநில அரசும் இவ்வாறே செய்யப்போவதாக அறிவித்துள்ளது மேலும் இதன் மூலம் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களை நிதியுதவியும் வழங்கலாம் ஆனால் இதில் நில குத்தகைதாரர் களுக்கும் வேளாண் கூலித் தொழிலாளர்களுக்கும் நிதி உதவி கிடைக்காமல் போகலாம்.

வருவாய்த் துறை வேளாண்மைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் மூலம் நில உரிமையாளரையும் குத்தகைதாரர் கூலித் தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு உதவி கிடைக்கச் செய்யலாம்.

4.இந்தியாவில் பொதுத்துறை விநியோக அமைப்பு (public distribution system India)

நம் நாட்டின் பொருளாதார சூழ்நிலையின் காரணமாக நிரந்தரமான சில விநியோக வழிகளை அரசாங்கம் அமைத்து நடத்துவது இன்றியமையாததாக உள்ளது. பொதுத்துறை விநியோகம் மூலம் மக்கள் பல நன்மைகளை பெறுகின்றனர்.

I.நன்மைகள்:

1. அரசுக்கு வருவாய்:பல அத்தியாவசிய பணிகளை திறமையாக விநியோகிப்பதில் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது.

2.நம் நாட்டில் எதிர்பாராத விலை உயர்வுகளை கட்டுப்படுத்த வேண்டியது தேவையாகும் அரசாங்க விநியோக முறையின் மூலம் விலைகளை பெருமளவில் நிலை படுத்தலாம்.

3. கலப்படம் கள்ளச்சந்தை ஆகியவற்றை நீக்குதல்.

4. உற்பத்தி பெருக்கம்:மிகையான உற்பத்தியை கொள்முதல் செய்வதற்கு அரசு வாணிபம் வழிவகுக்கின்றது.

5. நெருக்கடி நேரத்தில் உதவி:நாட்டில் உள்ள சிக்கலான சூழ்நிலைகளை பயன்படுத்தி களின் மூலம் செயற்கையான பற்றாக்குறையை ஏற்படுத்த வணிகர்கள் முயற்சி செய்யலாம்.இத்தகைய சூழ்நிலைகளில் அரசு வாணிப நடவடிக்கைகளின் மூலம் மக்களின் அத்தியாவசிய தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன.

6. சமதர்ம சமுதாயத்திற்கு வழி:தனிநாடு சமதர்ம சமுதாயத்தை அமைப்பதே குறிக்கோளாக கொண்டுள்ளது இதற்கு வகுப்பதற்கு அரசு வாணிபம் ஒரு கருவியாக செயல்படுகிறது.வசதிபடைத்த வணிகரிடம் தொடர்ந்து பணம் குவியாத வாறு அரசு வாணிப நடவடிக்கைகள் தடுக்கின்றன.

II. பொதுத்துறை விநியோக முறை மூலம் வினியோகிக்கப்படும் பொருட்கள்:.

பொதுத்துறை விநியோகத்தின் முதல் கவனம் உணவு பொருட்களின் விநியோகம் என்று கூறினால் அரிசி, கோதுமை, உணவு

என்னை, சீனி முதலான உணவுப் பண்டங்கள் அரசு விநியோக வழிகளின் மூலம் குறைந்த வருவாயுள்ள மக்களுக்கு அளிக்கப் படுகின்றன.

உணவுப்பண்டங்களை தவிர மண்ணெண்ணெய் குறைந்த விலை துணி ஆகியவையும் இவ்வகையில் விநியோகிக்கப்படுகின்றன உணவு உடை எரிபொருள் ஆகியவை சாதாரண மனிதனின் இன்றியமையாத தேவைகள் ஆகும்.

இவற்றுடன் சோப்பு வனஸ்பதி டார்ச் பேட்டரிகள் பிளேடுகள் முதலான பிற அத்தியாவசிய பண்டங்களையும் இம்முறையில் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் ரசாயன உரம் அலுமினியம் இரும்பு எக்கு முதலானவற்றையும் முக்கியமாக வாங்குபவர்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்ய அரசாங்கம் வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளது.

III. பொதுத்துறை விநியோகத்தில் அடங்கியுள்ள முக்கிய நடவடிக்கைகள்:

1. கொள்முதல்:பொதுத்துறை மூலம் விநியோகம் செய்ய விரும்பும் பொருட்களில் பெரும்பாலானவற்றை அரசு உற்பத்தி செய்வதில்லை எனவே தனியாரின் உற்பத்தியில் ஒரு பகுதியை அரசாங்கம் கொள்முதல் செய்கின்றது.

2. இருப்பு வைத்தல்:கொள்முதல் செய்த பொருட்களை முழுவதும் உடனுக்குடன் விற்பனை செய்வதில்லை எனவே இருப்பு வைக்க வேண்டியது தேவையாகின்றது குறிப்பாக உணவு பண்டங்களை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டலாம் இதற்கென அரசாங்கம் பல கிட் டங்கிகழகங்களை நிறுவியுள்ளது.

3. வினியோகம்:மேற்கூறப்பட்ட இரண்டு நடவடிக்கைகளின் வெற்றி சரியான விநியோகம் செய்வதில் தான் அடங்கியுள்ளது அரசு இதற்கென பல அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது குறிப்பாக நியாயவிலை கடைகள் கூட்டுறவு பண்டக சாலைகள் பேரங்காடிகள் முதலானவை சிறந்த விநியோக வழிகளாக திகழ்கின்றன.

IV.பொதுத்துறை விநியோகத்தில் பங்குபெறும் அமைப்புகள்:

1. அரசு வணிக கழகம்:இக்கழகம் 1956ஆம் ஆண்டு மே மாதம் நிறுவப்பட்டது இது வெளிநாட்டு வாணிபத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது நம் நாட்டில் பற்றாக்குறையாக உள்ள பல பொருட்களை இறக்குமதி செய்து வினியோகம் செய்கின்றது தொழிலுக்கு தேவையான காஸ்டிக் சோடா செய்தி அச்சடிக்கும் தாள் பாதரசம் சாயப் பொருட்கள் முதலானவற்றை கழகம் இறக்குமதி செய்கிறது. உணவு எண்ணெய் இறக்குமதி இன்னும் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது.

2. இந்திய உணவு கழகம்: மூன்றாம் திட்ட இறுதி காலத்தில் உணவு பண்டங்களின் விலைகள் மிகவும் விரைந்து கூடிய வண்ணமிருந்தன உணவுப் பொருள் விநியோகம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது ஏராளமான நியாயவிலை கடைகள் நிறுவப்பட்டது இந்த நடவடிக்கைகளை திறம்பட நிர்வகிப்பதற்கு தனி நிறுவனம் தேவைப்பட்டது 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய உணவு கழகம் அரசால் நிறுவப்பட்டது.

இதன் நடவடிக்கைகள் பின்வருமாறு:

*உணவு தானியங்கள் பிற உணவுப் பண்டங்களைக் கொள்முதல் செய்து இருப்பு வைத்து தேவையான இடங்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்வது.

*உணவு தானிய உற்பத்தி பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பது.

*அரிசி மற்றும் பிற உணவு தானியங்களை பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு வரும் பணிகளை செய்வதற்கான ஆலைகளை நிறுவுதல்.

III. பொருள் வழங்குதல் மற்றும் கூட்டுறவுத்துறை:

இத்துறை 1974-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது இதன் நோக்கங்கள்: *அத்தியாவசிய பண்டங்களை நியாய விலைக்கு பொது மக்களுக்கு கிடைக்கச செய்வது.*இத்தகைய பண்டங்களின் உற்பத்தி விலை விநியோகம் ஆகியவற்றை கண்காணிப்பது.*பாதகமான வாணிப நடவடிக்கைகளிலிருந்து வாங்குவோருக்கு பாதுகாப்பு அளிப்பது.*நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை களின் மூலம் விநியோகத்தை மேற்கொள்வது.

IV. நியாயவிலை கடைகள்:

பொதுத்துறை விநியோகத்தின் மிக முக்கியமான அமைப்பு நியாயவிலைக் கடைகள் ஆகும் நம் நாட்டில் ஏறத்தாழ 2 லட்சத்து 25 ஆயிரம் நியாயவிலை கடைகள் நிறுவப்பட்டுள்ளன இவை அனைத்திலும் உணவு தானியங்களும் சீனியும் விநியோகிக்கப்படுகின்றன நகரங்களில் உள்ள பல நியாயவிலை கடைகளில் பிற அத்தியாவசிய பண்டங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

V. மத்திய கிடங்கு கழகம் மாநில கிடங்கு கழகம்:

1957ஆம் ஆண்டில் மத்திய கிடங்கு கழகம் நிறுவப்பட்டது அதை தொடர்ந்து மாநில கிடங்கு கழகமும் நிறுவப்பட்டன.கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களை இருப்பு வைக்கும் பணியை இவை செய்கின்றன.

இவை தவிர பல கூட்டுறவு சங்கங்களும் இந்திய உணவு கழகமும் இடங்களை நிறுவியுள்ளன உணவு தானியங்கள் எண்ணெய் வித்துக்கள் உரம் முதலான பலவகை பண்டங்களை இருப்பு வைக்க இவை பயன்படுகின்றன. இதன் பணிகள் 1.விஞ்ஞான அடிப்படையில் அமைந்த நவீன இருப்பு வைக்கும் வசதிகளை குறைந்த செலவில் கிடைக்கச் செய்வது2.வணிகர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிறங்கி ரசிகர்களின் பேரில் எளிதாக கடன் பெறும் வசதியை அளிப்பது.

VI. கூட்டுறவு பண்டக சாலைகள்:

நம் நாடெங்கிலும் ஏராளமான வாங்குவோர் கூட்டுறவு சங்கங்களும் கூட்டுறவு பண்டக சாலைகளும் தோன்றியுள்ளன நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கும் இடங்களில் அரசு உணவு மற்றும் பிற பொருள் விநியோகத்திற்கு சங்கங்களை தேர்ந்தெடுக்கின்றன.

VII. பொதுத்துறை விநியோகமும் இரட்டை விலை முறையும்:

பல அத்தியாவசிய பண்டங்களின் வினியோகம் மற்றும் விலைகளை கட்டுப் படுத்தும் நோக்கத்துடன் இரட்டை விலை முறையின் பின்பற்றப்படுகின்றது.பொதுத் துறை மூலம் வினியோகிக்கப்படும் சில பொருட்களுக்கும் பெருமளவு அரசு துறைகளுக்கு தேவைப்படும் பொருட்களும் இம்முறையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது உணவு

தானியங்கள் உடலுக்கு தேவையான இரும்பு அலுமினியம் போன்றவையும் இதில் அடங்குபவை ஆகும்.

## Unit--5

### 1.வேளாண்மை உழைப்பாளர்கள்

வேளாண்மையில் விளைச்சல் உற்பத்தி காரணிகளின் அளவையும் தரத்தையும் சார்ந்த அமைகின்றது உற்பத்தி காரணிகளில் ஒன்றான உழைப்பு எப்படி அமைகின்றது என்பதை இந்தியாவிலிருக்கும் வேளாண்மை உழைப்பாளர்கள் பற்றி ஆராய்வதன் மூலம் அறியலாம்.

#### I. வேளாண்மை உழைப்பு விளக்கமும் ,வகைகளும்

விளக்கம்:வேளாண்மை உழைப்பாளர்கள் இயல்பான அமைப்பு முறையாலும் தொழில்களில் பணி செய்யும் உழைப்பு அவர்களிடமிருந்து வேறுபடுகின்றனர் ஆதலால் வேளாண்மை உழைப்பாளர்களுக்கு இலக்கணம் வகுப்பது கடினமானது.

முதல் வேளாண்மை உழைப்பாளர் விசாரணை கூலி பெற்றுக்கொண்டு பயிர்களை வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கின்றோம் மக்களை வேளாண்மை கூலிகள் என்று வரையறுத்தது.

இரண்டாம் வேளாண்மை உழைப்பாளர் விசாரணையில் வேளாண்மை உழைப்பாளர்கள் என்ற வகையில் பயிர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதோடு தொடர்புடைய தொழில்களான கால்நடை வளர்ப்பில் பால் பண்ணைத் தொழில் கோழி வளர்த்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள அவர்களையும் சேர்த்துக் கொண்டனர்.

உழைப்பு பற்றிய தேசிய குழு வேளாண்மை உழைப்பாளர் அடிப்படையில் தொழில்நுட்ப திறன் பெற்றவராகவும் அமைப்புக்கும் உடல் உழைப்பால் பெறுவதைத் தவிர வேறு இல்லாதவராகவும் இருப்பவர் என்று விளக்குகின்றது.

பொதுவாக ஒரு குடும்பத்தில் வேலை செய்கின்ற அவர்களில் பெரும்பாலானவர்கள் வேளாண்மையிலும் அது தொடர்பான தொழில்களில் ஈடுபட்டு இருந்தாலோ அல்லது அவர்களுடைய மொத்த வருவாயில் பெரும்பகுதி வேளாண்மையிலும் அதனை சார்ந்த தொழில்களும் பணி செய்வதன் மூலம் கிடைத்தாலும் குடும்பத்தை வேளாண்மை உழைப்பாளர் குடும்பம் என்று கருதலாம்.

வகைகள்:

பொதுவாக உழைப்பாளிகளை நுட்பத் திறன் உடைய உழைப்பாளர்கள், அரைகுறை தொழில்நுட்பத் திறன் உடையோர், தொழில்நுட்பத் திறன் அற்ற உழைப்பாளர்கள் என்று பகுப்பது உண்டு.

வேளாண்மையின் இயல்பையும் நமது நாட்டில் இருக்கும் நடைமுறையில் ஒட்டி வேளாண்மை உழைப்பாளர்களை வகைப்படுத்த முயலலாம் வேளாண்மை அமைப்பு முறையை ஒட்டி வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களை

1. நில உடைமையாளர்கள் 2. குத்தகைதாரர்கள் 3. விவசாய உழைப்பாளர்கள் என்று மூன்று பிரிவுகளுக்குள் கொண்டு வர முயன்றனர் ஆனால் இது திட்டவட்டமான தெளிவான பிரிவாக இருக்கவில்லை சிறிய நில உடைமையாளர்கள் நிலத்தை குத்தகை சாகுபடி செய்பவர்களில் பலரும் விவசாய உழைப்பாளர்கள் ஆக இருக்கின்றனர். அதோடு தமிழகத்தில் பண்ணையாட்கள் என்றும் மத்திய பிரதேசத்தில் ஷல்காரி, பீகாரில் கம்யர்கள்என்றும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு பெயரில் பண்ணையிலேயே வாழ்ந்து உழைக்கின்ற அவர்கள் உள்ளனர் இவர்களில் சிலர் இன்றும் பண்ணை அடிமைகளாக இருப்பதனை அறிகின்றோம்.

காங்கிரஸ் வேளாண்மை சீர்திருத்தக் குழு விவசாய உழைப்பாளர்களை மூன்று வகைகளாக 1. உழவர்கள் அறுவடை செய்பவர்கள், களை எடுப்பவர்கள், நாற்று நடு பவர்கள் போன்று பருவகால பணிகளை செய்கின்ற உழைப்பாளர்கள் உழைப்பாளர்கள் என்றும் 2. கரை போடுதல் தோண்டுதல் குளங்களில் வண்டல் மண்ணை திரட்டுதல் போன்ற பணிகளை செய்பவர்கள் சாதாரண உழைப்பாளர்கள் என்றும் 3. தச்சர்கள் கொத்தனார்கள் கொல்லர்கள் செய்பவர்களை நுட்பத் திறன் உடைய உழைப்பாளர்கள் என்றும் பகுத்தது.

உழைப்பு பற்றிய தேசிய வேளாண்மை கொண்டு வேளாண்மை உழைப்பாளர்களை 1. நிலமற்ற உழைப்பாளர்கள் 2. மிக சிறிய விவசாயிகள் என்று பிரிக்கின்றது.

விவசாயக் கூலி ஆட்களின் அளவு

உதய கூலி ஆட்களின் எண்ணிக்கை அச்சுறுத்திக் இந்த வகையில் வளர்ந்து வருகின்றது 61 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நிலமற்ற விவசாயக் கூலிகள் 3.15 கோடி இவர்களின் எண்ணிக்கை 1971 ஆம் ஆண்டு 4.75 கோடியாக உயர்ந்தது 1991 விவசாய கூலி ஆட்களின் எண்ணிக்கை 7.4 கோடியாக உயர்ந்தது. விவசாயக் கூலி ஆட்களின் எண்ணிக்கை பெருகுவதற்கான காரணங்களை சுட்டிக்காட்டலாம்:

1. தொழில் வேலைவாய்ப்பின்மை 2. மக்கள் தொகை பெருக்கம் 3. கூடுகின்ற கடன் 4. நில பகுப்பும் தூண்டுதலும் 5. பணப்புழக்கம்

II. வேளாண்மை துறையில் வேலையின்மை:

நமது நாட்டுப் பொருளாதார சிக்கலில் சிக்கலைத் தீர்க்க முடியாத நோய் ஆகும் நமது முன்னேற்ற முயற்சிக்கு தடையாக இருப்பது வேலையில்லாத் திண்டாட்டம் ஆகும் இதுவே வறுமையின் காரணமாகவும் விளைவாகவும் இருப்பதால் 1998இல் நாட்டு மக்களில் ஏறத்தாழ 43 சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பதாக மதிப்பிடுகின்றனர்.

வேலை இல்லாத் அவர்களில் பெரும்பான்மையினர் கிராமங்களில் வேளாண்மை துறையில் உள்ளனர் இயல்பை புரிந்துகொள்ள அதனை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்

1. மறைந்திருக்கும் வேலையின்மை:நமது கிராமங்களில் இத்தகைய வேலையின்மையை மிகுதியாகக் காணப்படுகின்றது வெளித்தோற்றத்திற்கு வேலை செய்வதுபோல காணப்படுகின்ற பலர் உண்மையில் தங்கள் உழைப்பின் மூலம் உற்பத்தியை கூடுவதில்லை எந்த அளவாக இருந்தாலும் அதனை பலரும் பகிர்ந்து செய்கின்றனர் குறிப்பாக வேலை செய்யும் விவசாய குடும்பங்களில் இருக்கின்ற நிலத்தின் அளவு கூடுவது இல்லை ஆனால் குடும்பத்தினரின் எண்ணிக்கை கூடுகின்றது எல்லோரும் அதே நிலத்தில் பாடுபடுகின்றனர் வேலை செய்பவர்களில் சிலர்

வெளியேறினாலும் மொத்த உற்பத்தி பாதிக்காது அதாவது இறுதிநிலை உற்பத்தி சைபர் ஆக இருக்கும்.

2. பருவகால வேலையின்மை:. வேளாண்மை இயற்கையை சார்ந்து அமைவதால் ஆண்டு முழுவதும் வேளாண்மைப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதில்லை களையெடுப்பு அறுவடை போன்ற பணிகள் நடைபெறும் பொழுது கிராமங்களில் எல்லோருக்கும் வேலை கிடைக்கும் வேலை ஆட்கள் பற்றாக்குறை கூட ஏற்படுவதுண்டு ஆனால் மற்றைய காலங்களில் பலர் வேலை இல்லாமல் சோம்பி கிடைக்கின்றன இதனையே பருவகால வேலையின்மை அல்லது பகுதிகளை வேலையின்மை என்று கூறலாம்.

நமது நாட்டில் இருக்கும் வேலையின்மை பெரிதும் மறைந்திருக்கும் வேலையின்மை பருவகால வேலையின்மை வகைகளை சார்ந்ததாகவே இருக்கின்றது வளர்ச்சி பெற்ற நாடுகளில் இருக்கும் தொழில்நுட்ப வேலையின்மை பிறழ்ச்சிகாரணமான வேலையின்மைபோன்றவை பெரிய அளவில் இங்கு இன்னும் தோன்றவில்லை.

வேளாண்மையில் வேலையின்மையின் அளவு:

விவசாயக் கூலி ஆட்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைப்பதில்லை இரண்டாவது வேளாண்மை உழைப்பாளர்களின் விசாரணையின் படி 1956 57 தினக்கூலி வேலை செய்யும் ஓர் ஆண் உழைப்பாளிக்கு கூலிவேலை ஓராண்டில் 197 நாட்களுக்குத்தான் கிடைத்தது மேலும் அவர் சொந்த முறையில் 40 நாட்கள் வேலை செய்கின்றார் நீதி 118 நாட்கள் இவர் வேலை இன்றி இருந்தார்.பெண் கூலி ஆட்களுக்கு இதை விட அதிக நாட்கள் வேலை கிடைப்பதில்லை மொத்தத்தில் நான்கு முதல் ஐந்து மாதங்கள் வேலை கிடைக்காமல் வாடினர்.

கிராம உழைப்பாளர் விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி 1964 65 வேளாண்மையில் ஆண்டின் ஆண்களுக்கு 208 நாட்களும் பெண்களுக்கு நூத்தி முப்பத்தி எட்டு நாட்களும் சிறுவர் சிறுமிகளுக்கு 167 நாட்கள்தான் வேலை கிடைத்தது இப்பொழுது ம் ஆண்டில் சுமார் ஏழு மாதங்கள் தான் விவசாய கூலி ஆட்களுக்கு வேலை கிடைக்கின்றது.

திட்டக்குழுவின் மதிப்பீட்டின்படி 1978 இல் இந்தியாவில் முழுநேர வேலை இல்லாமல் இருந்தவர்கள் மொத்தம் 4.37 மில்லியன் இதில் கிராமங்களில் வேலை இல்லாதவர்கள் 2 மில்லியன் தொடர்ந்து வேலை கிடைக்காமல் இடையிடையே வேலை இல்லாமல் இருந்தவர்கள் மொத்தம்

11.2 மில்லியன் இதில் கிராமங்களில் இருந்தவர்கள் 8.15 மில்லியன் எதிர்காலத்தில் வேலையின்மையின் அளவு இதைவிட கூடும் என்று எதிர்பார்க்கின்றனர்.

வேலையின்மை அளவு அதிகமாக இருப்பதற்கான காரணங்கள்:

1. மக்கள் தொகை பெருக்கம் 2. வேளாண்மையை புறக்கணித்தல் 3. தொழில்துறையின் மெதுவான வளர்ச்சி

தீர்வு முறைகள்:வேலையின்மையின் அளவை குறைக்கவும் வேலைவாய்ப்புகளை பெருக்கவும் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றலாம்

*மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல்
*வேளாண்மையை விரிவுபடுத்துதல்.
*தொழில்களின் பெருக்கம்.

III. வேளாண்மை உழைப்பாளர்களின் இன்றைய நிலையும் முன்னேற்ற வழிமுறைகளும்

விவசாயக் கூலிகளின் இன்றைய நிலை: 1. வேலையின்மை 2. குறைவான கூலி 3. குறைந்த வருவாய் 4. வளர்கின்ற செலவு 5. கடன் சுமை

முன்னேற்ற வழிமுறைகள்:

1. வேலை நேரத்தை ஒழுங்குபடுத்துதல்.
2. வேலை செய்யும் சூழல்
3. பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு.
4. சமுதாய பாதுகாப்பு நல நடவடிக்கைகள்.
5. குறைந்த அளவு கூலி சட்டம்
6. நிலச் சீர்திருத்தங்கள்
7. இறுதிநிலை விவசாயிகள் முன்னேற்றம்.
8. கூட்டுறவு அமைப்பு முறை.
9. இருபது அம்சத் திட்டம் மூலம் அடிமை ஒழிப்பு முறை அகற்றுதல் கடன்களை நீக்கல் குறைந்த அளவு கூலி வீடுகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## IV. பூமிதான இயக்கம்

நிலமற்ற வேளாண்மை உழைப்பாளர்களுக்கு வாழ்விக்க வந்த முயற்சிகளில் குறிப்பிடத்தக்கது பூமிதான இயக்கம் ஆகும் இதனை காந்தியடிகளின் சீடரான வினோபா பாவே தொடங்கி நடத்தினார் இதனை அமைதிப் புரட்சி என்றும் அழ புரட்சி என்றும் உலகம் வியந்து போற்றுகிறது.

இயக்கத் தொடக்கம்:.

1951இல் வினோபா பாவே ஆந்திராவுக்கு விவசாயிகளின் போராட்டத்தினால் ஏற்பட்ட வன்முறையை குறைக்க பாதை யாத்திரை சென்றபோது அங்குள்ள விவசாயிகள் தங்களுக்கு நிலம் கிடைத்தால் தங்களது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று கூறினர் ஆந்திராவிலுள்ள தெலுங்கானா வட்டாரத்தில் இருக்கும் பொச்சம் பள்ளி கிராமத்தில் ஏப்ரல் பதினெட்டில் வினோபாபாவே மாலை வழிபாட்டில் பேசுகின்ற பொழுது நில பகிர்வின் தேவையை குறிப்பிட்டு நிலம் படைத்தவர்கள் பூமியை தானமாக கொடுத்தால் அன்பு வழியில் சிக்கலைத் தீர்க்கலாம் என்று கூறினார் உடனே ராமச்சந்திர ரெட்டி 100 ஏக்கர் நிலத்தை கொடையாக வழங்கினார் இப்படித் தொடங்கிய பூமிதானம் பின்னால் கிராம தானமாகவளர்ந்தது.

அடிப்படைக் கருத்துக்கள்:

1.நிலம் இறைவன் அளித்த கொடை காற்று சூரிய ஒளி போல மண்ணும் தனிப்பட்ட அவர்களுக்கு சொந்தமாக இருக்கக் கூடாது.

2.தங்களது தேவைக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் மனமுவந்து நிலை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

3. மனிதன் மாற கூடியவன் அன்பு வழியில் வேண்டிக்கொண்டால் தானமாக கொடுப்பான்.

4.உழுபவனுக்கே நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் ஏற்றத்தாழ்வற்ற சுரண்டலற்ற புதியதொரு சர்வோதய சமுதாயத்தை அமைக்க இது துணை செய்யும்.

சாதனைகள்:

பூமிதான இயக்கம் செய்த சாதனை குறிப்பிடத்தக்கதாகும்1954 மார்ச்சுக்குள் நிலம் கொடையாக 25 லட்சம் ஏக்கருக்கு மேல் பெறப்பட்டது 1970 செப்டம்பர் வரை பூமிதான இயக்கத்துக்கு

கிடைத்த நிலம் 41.6 லட்சம் ஏக்கர் இதில் 11.7 5 லட்சம் ஏக்கரை பகிர்ந்து அளித்தனர்.

நடைமுறை சிக்கல்கள்:

பூமிதான இயக்கம் முதலில் பெற்ற வெற்றியை தொடர்ந்து பெறவில்லை இதற்கான காரணங்களை சுட்டிக்காட்டலாம்.

1. நாடு தழுவிய இயக்கமாக நடத்த போதுமான தொண்டர்கள் இல்லை உற்சாகம் குறைந்தது.

2.மாநில அரசுகள் தேவையான சட்டங்களை கொண்டு வருவதில் காலம் கடத்தினர் இதனால் நிலத்தை பகிர்ந்தளிப்பது காலதாமதமானது.

3.முதலில் நிலம் கொடுத்த சிலர் விவசாயத்திற்கு பயன்படாத வழக்கில் உள்ள நிலத்தை கொடுத்துவிட்டனர்.

4. நிலப் பகிர்வில் சிக்கல்கள் தோன்றின.

நிறைவுரை:

பூமிதான இயக்கம் நாடு முழுவதும் பரவி எதிர்பார்த்த வகையில் வெற்றி பெற்றிருந்தால் நில சிக்கல் தீர்ந்திருக்கும் நிலமற்ற வேளாண்மை உழைப்பாளர்கள் வாழ்க்கையில் வளமும் தோன்றியிருக்கும் உலகிற்கு வழிகாட்டும் வாய்ப்பு நமது நாட்டிற்கு கிடைத்திருக்கும்.இப்பொழுது வரலாற்றில் தனியிடம் பெற்ற புதுமை புரட்சி இயக்கமாக மட்டுமே பூமிதான இயக்கம் இருக்கின்றது.

**Prepared By:**
**Dr. R.Rajeswari**

1.**வேளாண்மைப் பொருளாதாரம்   டாக்டர்.   மா.பா. குருசாமி**
**2.அங்காடியியல்--டாக்டர் .மா .பா. குருசாமி**